11.11.2016

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வட இந்தியாவின் கருப்பு உப்பு**

பணத்தில் மட்டும் அல்ல. உப்பிலும் கருப்பு உப்பு உள்ளது. 'கருப்பு உப்பு' என்னும் காலாநமக் வட இந்திய சமையலில் சேர்க்கப்படும் முக்கிய பொருள். இமயமலை மற்றும் நேபாளப் பகுதிகளில் மலைகளில் இருந்து வெட்டி எடுக்கப்படும் இந்த உப்பு 'ஹிமாலயன் கருப்பு உப்பு' என அழைக்கப் படுகிறது. சோடியம் குளோரைடு இதன் அடிப்படைப்பொருளாக இருப்பதால் கருப்பு உப்பிற்கு உப்புச்சுவை உள்ளது. கிரிகைட் போன்ற வேதிப்பொருட்கள் இதற்கு கருப்பு நிறத்தையும், சுவையையும் தருகின்றன. முட்டை மணமுள்ள இந்த உப்பு முட்டைக்கு மாற்றாகச் சேர்க்கப்படுகிறது.. நெஞ்சு எரிச்சலுக்கு மருந்தாக கருப்பு உப்பு பரிந்துரை செய்யப்படுகிறது.

**சம்பா மிளகாய் பயிரிட ஆலோசனை**

திண்டுக்கல் 'சம்பா வகை மிளகாய் கிலோ ரூ.110 வரை விலை கிடைக்கும்' என திண்டுக்கல் வேளாண் வணிகம் துணை இயக்குனர் மனோகரன் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது: மிளகாய் உற்பத்தியில் தமிழகத்தில் முண்டு, சன்னம் போன்ற மிளகாய் ரகம் அதிகம் பயிரிடப்படுகின்றன. இந்த ஆண்டு போதுமான மழை இல்லாததால் மிளகாய் உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது. அதே சமயம் ஆந்திராவில் சராசரியை விட 28 சதவிகிதம் சாகுபடி அதிகரித்துள்ளது. விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் சந்தை ஆய்வு நடத்தப்பட்டது. அதில் சம்பா வகை மிளகாய் வத்தல் அறுவடை காலத்தில் கிலோவுக்கு ரூ.100 முதல் ரூ.110 வரை விலை கிடைக்கலாம்.

அதற்கேற்ப நடவுப் பணிகளை விவசாயிகள் மேற்கொள்ளலாம் என, தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கான ஆலோசனை கூட்டம்

குஜிலியம்பாறை, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் செயல்படும், வளம் குன்றா உழவர் உற்பத்தியாளர் கம்பெனி மற்றும் வட்டார வேளாண் துறை சார்பில், விவசாயிகளுக்கான பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு கிட்ட விழிப்புணர்வு கூட்டம் பில்லமநாயக்கன்பட்டியில் நடந்தது. கம்பெனி தலைவர் கோபால்சாமி தலைமை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் கனகவள்ளி முன்னிலை வகித்தார்.

முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு, பயிர் சாகுபடி, அதற்கான பாதுகாப்பு, காப்பீடு திட்டம் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. முகாமில் 120 விவசாயிகள் பயிர் காப்பீடு செய்தனர். உதவி வேளாண் அலுவலர் குமரவேல், அலுவலர்கள் சவணக்குமார், ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு விளக்கம்

கம்பம்: திருச்சி மகளிர் தோட்டக்கலைக்கல்லூரி மாணவிகள் கிராம தங்கல் கிட்டக்கின் கீழ் ராயப்பன்பட்டியில் தங்கி விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை விளக்கி வருகின்றனர். திராட்சையில் செவட்டை நோய் தாக்குதலை கட்டுப்படுத்த 'போர்டோ' கலவையை பயன்படுத்த வேண்டும் என காமயகவுண்டன்பட்டி திராட்சை விவசாயிகளிடம் வலியுறுத்தினர். உதவி வேளாண் அலுவலர் சுப்ரமணி, திராட்சை விவசாயிகள் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு ஆலோசனை

ஆண்டிபட்டி, ஆண்டிபட்டி அருகே கதிர்நரசிங்கபுரம், டி.சேடபட்டி பகுதியில் கிராம தங்கல் திட்டத்தில் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் விவசாயி களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கினர். இயற்கை விவசாயத்திற்கு வித்திடும் விதமாக ஜீவாமிர்தம் மற்றும் தாவர பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பு குறித்து மாணவிகள் கங்கா, கவுசிகா, இலக்கியா நஸ்ரின், ஐஸ்வர்யா, ஜனகீர்த்தி, ஜெயமணி, ஆனந்தசெல்வி ஆலோசனை வழங்கினர். விவசாயிகள் பலர் பங்கேற்று பயனடைந்தனர்.

## நவ.30க்குள் பயிர் காப்பீடு செய்யலாம்

ராமநாதபுரம், நவ.,30க்குள் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வேண்டும், என விவசாயிகளுக்கு கலெக்டர் அறிவுறுத்தியுள்ளார்.பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து கொள்வதற்கான விழிப்புணர்வு ஆலோசனை கூட்டம், கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. கலெக்டர் நடராஜன் தலைமை வகித்தார்.அவர் பேசியதாவது:விவசாயிகளின் நலனுக்காக பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கடனுதவி பெறும் விவசாயிகள் கட்டாயமாகவும், கடனுதவி பெறாத விவசாயிகள் விருப்ப அடிப்படையிலும் பங்கேற்கலாம்.அதிகளவு சாகுபடியாகும் பயிர்களுக்கு வருவாய் கிராமம் போன்ற சிறிய அளவிலான பகுதியை அடிப்படையாக கொண்டு பயிர் பாதிப்பு கணக்கிடப்படுகிறது. இதன் மூலம் கிராம அளவில் இழப்பீடு கிடைக்கும் வாய்ப்பு அதிகம்.மேலும், விதைப்பு, விதைப்புக்கு பிந்தைய நிலை, அறுவடை ஆகிய மூன்று நிலைகளிலும் ஏற்படும் மகசூல், பயிர் பாதிப்புகளுக்கு இழப்பீடு கிடைக்கும். புள்ளியியல் துறையில் இருந்து அறுவடை முடிவுகள் பெறப்பட்ட 60 நாட்களில் இழப்பீடு கிடைக்கும். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதற்கான விண்ணப்ப படிவம், உறுதிமொழி படிவம், அடையாள அட்டை, முகவரி சான்று( ஆதார் அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், பான்கார்டு, ஓட்டுநர் உரிமம்), நில உடமை சான்றாக சிட்டா, அடங்கல் மற்றும் நிலவரி ரசீது, பயிர் சாகுபடி சான்று, வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் ஆகிய ஆவணங்களை சமர்பித்து பதிவு செய்யலாம். இதற்கான கடைசி நாள் நவ.,30. இவ்வாறு அவர் பேசினார். வேளாண்மைத்துறை துணை இயக்குனர்(மாநில திட்டம்) ருதுவான் முகைதீன் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

## விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம்

குமாரபாளையம்: படைவீடு பகுதியில், விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம் நடந்தது. குமாரபாளையம் அடுத்த, படைவீட்டில் வேளாண் துறை சார்பாக, வட்டார வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம், விதை கிராம திட்டப்பயிற்சி முகாம் நடந்தது. வட்டார வேளாண் உதவி இயக்குனர் அசோக்குமார் தலைமை வகித்தார். மானியவிலையில் ரொட்டவேட்டர், ராகி, பயிறுவகை விதைகள், பைப் லைன் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

கோடை உழவு, சான்று பெற்ற விதையை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுதல், இலவச நாற்றுகள் ஆகியவை குறித்து விளக்கமளிக்கப்பட்டன. பயிர் இன்சூரன்ஸ் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. வேளாண் அலுவலர்கள் லோகநாயகி, யுவராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.

## உணவு பாதுகாப்பு திட்டத்தில் மானிய விலையில் உரம்

சிங்கம்புணரி. சிங்கம்புணரி வட்டாரத்தில் சில தினங்களுக்கு முன்பு பெய்த மழையை பயன்படுத்தி,தொடர்ந்து பெய்ய இருக்கும் வட கிழக்கு பருவ மழையை கணக்கில் கொண்டும் விவசாயிகள் உளுந்து,பாசிப்பயிறுகளை பயிரிட்டால் லாபம் பெறலாம்.

இங்குள்ள வேளாண்மை விரிவாக்க மைய விதைக்கிட்டங்கியில் வம்பன்-5 ரக சான்றிட்ட உளுந்து 400 கிலோ, ஆதார விலை பாசிப்பயிறு விதை 200 கிலோ இருப்பில் உள்ளது.

பாசிப்பயிறு விதை பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் சிங்கம்புணரி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலரை அணுகலாம். உளுந்து, பாசிப்பயிறு விதை வாங்கும் விவசாயிகளுக்கு உணவு பாதுபாப்பு திட்டம்-பயிறு 2016--17 திட்டத்தில் திரவ உயிர் உரம், பயிறு நுண்ணூட்ட உரம் மானிய விலையில் வழங்கப்படும்.

இக்தகவலை சிங்கம்புணரி வேளாண்மை உதவி இயக்குநர் கார்த்திகேயன் தெரிவித்தார்.

## சிவகங்கை மாவட்டத்தில் 56 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி

சிவகங்கை, சிவகங்கை மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர் உட்பட 1.12 லட்சம் எக்டேர் சாகுபடி பரப்பு உள்ளது. 678 பொதுப்பணித்துறை கண்மாய்கள் உட்பட 4,966 கண்மாய்கள் உள்ளன. மாவட்டத்தில் சராசரியாக 85 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மழைக்குறைவால் அக்., 31 வரை 56,100 எக்டேரில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் நேரடி விதைப்பு மூலமே சாகுபடி செய்துள்ளனர்.

தவிர சிறுதானியம் 150 எக்டேர், பயறு வகைகள் 512 எக்டேர், எண்ணெய் வித்துகள் 1,920 எக்டேர், கரும்பு 3 ஆயிரம் எக்டேர் பயிரிடப்பட்டுள்ளன. அக்டோபரில் சராசரியாக 171.9 மி.மீ., பெய்ய வேண்டும். 67.4 மி.மீ., மழையே கிடைத்தது.

மாவட்டத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்மாய்களில் தண்ணீர் இல்லை. மற்ற கண்மாய்களில் 10 நாட்களுக்கும் குறைவான நீரே உள்ளது. வடகிழக்கு பருவமழையை பொறுத்தே சாகுபடி பரப்பு அதிகரிக்கும் என, வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வேளாண்மை இணை இயக்குனர் செல்வம் கூறுகையில், 'ஆண்டு முழுவதும் சராசரியாக 904.4 மி.மீ., மழை பெய்யும். இந்த ஆண்டு அக்டோபர் வரை 613.8 மி.மீ., பதிவாகியுள்ளது. எதிர்பார்த்த மழை பெய்தால் 75 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்ய வாய்ப்புள்ளது. தேவையான விதை, உரம் இருப்பில் உள்ளது,' என்றார்.

**பண்ணை கருவிகள் வாங்க ரூ.25 லட்சம் ஒதுக்கீடு**

சிவகங்கை, சிவகங்கை மாவட்டத்தில் தோட்டக்கலை விவசாயிகள் பண்ணைக் கருவிகள் வாங்க 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது: தேசிய தோட்டக் கலை இயக்க திட்டத்தில் கவாத்து கத்தி, கிளை வெட்டும் கத்திரி, பிளாஸ்டிக் கிரேட்ஸ், பி.வி.சி., பைப், தார்பாய், தண்ணீர் டிரம், களைக்கொத்து, கடப்பாறை, மண்வெட்டி, எடையிடும் கருவி மற்றும் பயிர் சாகுபடிக்கு தேவையான உபகரணங்கள் வாங்க நிதியுதவி அளிக்கப்படும்.

ஒரு விவசாயிக்கு 50 சதவீத மானியம் (அ) அதிகபட்சமாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

இந்த தொகை ஆய்வுக்கு பின் நேரிடையாக விவசாயிகள் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.

விரும்புவோர் விண்ணப்பத்துடன் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், ரேஷன்கார்டு, ஆதார் அட்டை நகல், சிட்டா, அடங்கல், வங்கி கணக்கு புத்தக முதல் பக்கம் நகல்

ஆகிவற்றை இணைத்து தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும், என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அஞ்சலத்தில் சிறுதானியவிதை

கிராம திட்ட பயிற்சிதா.பேட்டை, : தா.பேட்டை அடுத்த அஞ்சலம் கிராமத்தில் வேளாண்மைத் துறையின் அட்மா சார்பில் சிறுதானிய விதை கிராம திட்ட பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் செல்வம் தலைமை வகித்தார். சிறுகமணி வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் பாஸ்கரன், மக்காசோளம் வயலில் உரமிடல், நீர் பாய்ச்சுதல், களை எடுத்தல் குறித்தும், வேளாண்மை அலுவலர் நாகராஜன் வேளாண்மை துறையின் செயல் திட்டங்கள்தும், வட்டார தொழில்நுட்ப மேலாளர் வரகுணபாண்டியன் அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் பயிற்சி அளித்தனர். மேலும் மாக்காசோளம் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் நீலியாம்பட்டி, கோணப்பம்பட்டி, அஞ்சலம் கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### பயிறு வகைகளில் உற்பத்தியை அதிகரிக்க...

திண்டுக்கல்: சாணார்பட்டி வட்டாரம் ராகலாபுரத்தில் பயிறு வகை பயிர்களில் உற்பத்தியைப் பெருக்கிட தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவிஇயக்குநர் இளங்கோவன் தலைமை வகித்து பேசுகையில், 'குறைந்த செலவில் அதிக லாபம் கிடைக்க பயறுவகை பயிர்களை பயிரிட வேண்டும். மண் பரிசோதனை முடிவுப்படி உரமிட்டால் உரச்செலவை குறைக்க முடியும்' என்றார்.

உதவி வேளாண்மை அலுவலர் உத்தமபுத்திரன் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றும் பூச்சிநோய் தடுப்பு குறித்து விளக்கம் அளித்தார். தொடர்ந்து அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் பொன்.தமிழரசு மற்றும் சேகர் ஆகியோர் விதை

நேர்த்தி குறித்து செயல்விளக்கம் அளித்தனர். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா நன்றி கூறினார்.

## சின்னமனூர் பகுதியில் அவரைக்காய் அமோக விளைச்சல் விவசாயிகள் மகிழ்ச்சி

சின்னமனூர், : மழை பெய்யாததால் நோய் தாக்குதலில் இருந்த தப்பிய அவரை அதிக விளைச்சல் கண்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.சின்னமனூர் பகுதியில் குறுகிய காலப் பயிர்களாக காய்கறிகளை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். கிணறு மற்றும் போர்வெல் பாசனத்தை நம்பி விவசாயிகள் தொடர்ந்து சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் செடி அவரை ஒரு முறை நடவு செய்து 50 நாட்களில் அறுவடைக்கு வரத் தொடங்கினால் தொடர்ந்து 3 மாதம் வரையில் வாரம் ஒரு நாள் பலன் கொடுத்து வரும். அப்படி ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையில் செலவு செய்கின்றனர். இயற்கையால் பழுதில்லா வளர்ச்சி கண்டால் ஏக்கருக்கு 120 கிலோ முதல் 150 வரை அவரைக்காய் கிடைக்கும். பயிர் வளரும்போது மழை பெய்தால் அது டானிக் போன்றதாகும். ஆனால், அறுவடை நெருங்கிடும் நேரம் மழை பெய்தால் உடனடியாக நோய் தாக்குதலுக்குள்ளாகும். இதனால், உற்பத்தி குறைந்து 3 மாதத்திற்குள் எதிர்பார்க்கும் காய்கள் பலனுக்கு வராமல் பாதிக்கப்படும். கடந்த வாரத்தில் அவரைக்காய் பல இடங்களில் அறுவடை துவங்கி நடந்து வருகிறது. குறிப்பாக இந்த அறுவடை நேரத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரம் அடைந்திருந்தால் நோய் தாக்கப்பட்டு உற்பத்தி குறைந்திருக்கும். சரியான மழை இல்லாத காரணத்தால் அவரை உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "வட கிழக்குப் பருவமழை சரிவரரப் பெய்யாததால் அவரை உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த நேரத்தில் மழை பெய்து இருந்தால் நோய் தாக்கப்பட்டு முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கும். அறுவடை தொடங்கியிருப்பதால் கிலோ ரூ.25 வரை விலைபோகிறது. இரண்டு வாரத்திற்கு முன் ரூ.50 வரை விலை போனது. உற்பத்தி அதிகரித்திருப்பதால் விலையும் குறைந்திருக்கிறது. இருந்தும் உற்பத்தி அதிகரித்து கட்டுபடியான விலை கிடைப்பதால் மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம்" என்றனர்.

**வறட்சியை சமாளிக்க சிறுதானிய விதைகள்**

இளையான்குடி, : இளையான்குடி பகுதியில் வறட்சியை சமாளிக்க சிறுதானிய விதைகளை வழங்க மாவட்ட வேளாண்மைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இளையான்குடி வட்டாரத்தில் வேளாண்மை சாகுபடிகள் அனைத்தும் வடகிழக்கு பருவமழையை நம்பியே நடைபெறுகிறது. இந்த பகுதியில் ஆண்டிற்கு முக்கிய பயிர்களான நெல் சுமார் 15ஆயிரம் ஹெக்டேர் அளவிலும், மிளகாய் 4 ஆயிரம் ஹெக்டேர் அளவிலும், பருத்தி 7ஆயிரம் ஹெக்டேர் அளவிலும், சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் போதிய மழை இல்லாததால் கண்மாய்கள், பண்ணைக்குட்டைகள் அனைத்தும் வறண்டு கிடக்கிறது. அதனால் விவசாயத்தை காப்பாற்ற முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போது பெய்யவேண்டிய வடகிழக்கு பருவமழையும் பொய்த்துப் போனதால் நெல், மிளகாய் விதைகள் சரியாக முளைத்து மண்ணைவிட்டு வெளிவரவில்லை. முளைத்த பயிர்கள் அனைத்தும் கடும் வெயிலால் கருகி வருகின்றன. அதனால் நெல் விவசாயம் முற்றிலும் அழியும் நிலையில் உள்ளது. ஆகவே வறட்சியைப் போக்க சோளம், கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, எள், தினை உள்ளிட்ட சிறுதானிய பயிர் விதைகளை இளையான்குடி வட்டார விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேளாண்மைத்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இதுகுறித்து விவசாயி குணசேகரன் கூறுகையில், “வடகிழக்கு பருவமழையை நம்பியே இளையான்குடி பகுதி விவசாயிகள் விவசாயம் செய்கிறோம். ஆனால் பருவமழையும் ஏமாற்றிவிட்டது. அதனால் வறட்சியைப் போக்க சிறுதானிய விதைகளை வழங்க கலெக்டர், வேளாண் அதிகாரிகள் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.